கனம் இராமநாதபுரம் மாவட்ட முதன்மை / அமர்வு நீதிபதி அவர்கள் முன்பாக

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364194

1. District : மாவட்டம் இராமநாதபுரம் PS: ஊ.ந.க.பிரிவு காவல்நிலையம் Year: ஆண்டு 2026 FIR No.: 13/2026 முத.அ. எண் Date: 23.09.2026 நாள்

2. (i) Act சட்டம்: பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகள் பாதுகாப்பு திருத்தச் சட்டம் 2018 Sections பிரிவுகள்: 13(1)(a) r/w 13(2) and Section 12 of PC Amendment Act 2018. and 316(5)

(ii) Act சட்டம்: பாரதிய நியாய சன்ஹிதா 2023 Sections பிரிவுகள்: 336(3), 340(2) and 61(2) of BNS.

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 22.9.2026 Date from : நாள் முதல் 23.9.2026 Date to : நாள் வரை

Time Period : நேர அளவு 15.00 hrs Time from : நேரம் முதல் 13.00 hrs Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.09.2026 Time : நேரம் 16.50 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் தொகுதி-II Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் அமார் ம.கி.மீ மேற்கு இராமநாதபுரம் நகராட்சி பேருந்து நிலைய வளாகத்தில் இயங்கும் இருசக்கர வாகனம் நிறுத்தமிடங்கள்

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : கு. மணிமேகலை குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்

(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு

(d) Nationality : நாட்டினம்

(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்

Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் தீயணைப்பு அலுவலர்

(g) Address : மாவட்ட ஆய்வகத்தில் அலுவலகம் முகவரி இராமநாதபுரம், சிங்காரத்தோப்பு (அ) விருதுநகர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

தாவரம் 12 ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- தாமதம் ஏதுமில்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

எதிரிகளின் விபரம்:-

1) திரு.ரமேஷ்குமார், வயது 36/2026, த/பெ கருப்பையா, வருவாய் ஆய்வாளர், இராமநாதபுரம் நகராட்சி.

2) திருமாரிமுத்து, வயது 38/2026, த/பெ காளிமுத்து, வருவாய் உதவியாளர், இராமநாதபுரம் நகராட்சி.

3) திரு.ரிஷிகேசவன், வயது 47/2026, த/பெ கணேசன், வருவாய் உதவியாளர், இராமநாதபுரம் நகராட்சி.

4) திரு.ஜோசப் ஜெயராஜன், வயது 68/2026, த/பெ மனுவேல்பிள்ளை, சன் பிரிண்டர்ஸ், இராமநாதபுரம்.

5) திரு.ஆனந்தன், வயது 55/2026, த/பெ சாத்தன், துப்புரவு மேற்பார்வையாளர், இராமநாதபுரம் நகராட்சி.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

23/09/26.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

23.09.2026, 17.15 மணி

Name: பெயர் M. இராமச்சந்திரன்
Rank: நிலை தலைமைக் காவலர்
மு.த.க. பரிவு
இராமநாதபுரம்

இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண்.13/2026 u/s 13(1)(a) r/w 13(2) and Section 12 of the Prevention of Corruption Act, 1988 (as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018) and Sections 316(5), 336(3), 340(2) and 61(2) of the Bharatiya Nyaya Sanhita, 2023 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

சமர்ப்பிக்கிறேன் - இன்று 23.09.2026ம் தேதி 16.00 மணிக்கு இராமநாதபுரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.சு.மீனலோசனி அவர்கள் கடந்த 22.09.2026ம் தேதி 15.00 மணிமுதல் 23.09.2026ம் தேதி 13.00 மணிவரை இராமநாதபுரம் நகராட்சி அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் இணை சோதனை சம்மந்தமாக அறிக்கை, பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள், போலியான ரசீதுகள் மூலம் வாகனம் நிறுத்துபவர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்ட பணம் ரூ.12,750/- மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்களுடன் கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண்.13/2026 u/s 13(1)(a) r/w 13(2) and Section 12 of the Prevention of Corruption Act, 1988 (as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018) and Sections 316(5), 336(3), 340(2) and 61(2) of the Bharatiya Nyaya Sanhita, 2023 ன்படி 23.09.2026ம் தேதி 16.50 மணிக்கு வழக்குபதிவு செய்தேன். வாதியின் புகார் பின்வருமாறு:- அனுப்புநர் திருமதி.சு.மீனலோசனி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், இராமநாதபுரம், சிவகங்கை (ம) விருதுநகர் மாவட்டம். பெறுநர் திரு.மு.இராமச்சந்திரன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம். அய்யா, பொருள்:- திடீர் இணை சோதனை - 22.09.2026ம் தேதி மதியம் 03.00 மணிமுதல் 23.09.2026ம் தேதி மதியம் 01.00 மணிவரை இராமநாதபுரம் மாவட்டம் புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள இரு சக்கர வாகனம் நிறுத்துமிடங்களில் உள்ள வசூல் மையங்களில் திடீர் இணை சோதனை நடத்தப்பட்டது - மேல் நடவடிக்கை எடுக்க கோருதல் - தொடர்பாக. பார்வை:- எனது திடீர் சோதனை அறிக்கை, நாள் 23.09.2026 இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவிற்கு, 22.09.2026ம் தேதியன்று இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள இருசக்கர வாகன நிறுத்துமிடங்களில் உள்ள வசூல் மையங்களில், வாகனம் நிறுத்துபவர்களுக்கு நகராட்சி ஊழியர்கள் போலி ரசீதுகளை வழங்கி பணம் வசூல் செய்து, அதனை நகராட்சியில் செலுத்தாமல் அரசுக்கு இழப்பு ஏற்படுத்தி, முறைகேடாக பணம் கையாடல் செய்து வருவதாக காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்களுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், 22.09.2026ம் தேதி மதியம் 03.00 மணிக்கு எனது திடீர் இணை சோதனை செயல்முறை நடவடிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்கள் முன்னிலையில், இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள இருசக்கர வாகன நிறுத்துமிடங்களில் பணியில் இருந்த நபர்களிடம் விபரத்தைத் தெரிவித்து, எனது தலைமையில் திடீர் இணை சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இராமநாதபுரம் புதிய பேருந்து நிலையத்தில், பேருந்துகள் வெளியேறும் நுழைவு வாசலின் இடது பக்கம் உள்ள இருசக்கர வாகன நிறுத்துமிடத்தில் கிழக்கு பார்த்தவாறு அமர்ந்து வசூல் செய்து கொண்டிருந்த, பின்னர் பெயர் விபரம்

தெரிந்த திரு.கருப்பையா என்பவரது மேஜையை சோதனை செய்ததில், மேற்படி மேஜையில் பயன்படுத்தப்பட்ட ரசீது கட்டாக, "இராமநாதபுரம் நகராட்சி புதிய பேருந்து நிலையம் இருசக்கர வாகன கட்டணம், S.No.002201, Dated: 22/9, நாள் 1க்கு ரூ.20, வண்டி எண் 6275, நேரம் 05.30 AM, வசூலிப்பவர் என்.குமரன், ஆணையாளர், இராமநாதபுரம் நகராட்சி" என்று தொடங்கி S.No.002300 வரையிலான மொத்த ரசீது கட்டில் S.No.002201 முதல் S.No.002278 வரை பயன்படுத்தப்பட்ட ரசீதுகளும், S.No.002279 முதல் S.No.002287 வரையிலான பயன்படுத்தப்படாத ரசீதுகளும் அடங்கிய ஒரு ரசீது கட்டும், மேலும் முற்றிலும் பயன்படுத்தப்படாத "இராமநாதபுரம் நகராட்சி புதிய பேருந்து நிலையம் இருசக்கர வாகன கட்டணம்" ரசீது புத்தகத்தில் S.No.002401 முதல் S.No.002500 வரையிலான ஒரு ரசீது புத்தகமும் காணப்பட்டது. மேற்படி இரண்டு ரசீது புத்தகங்களும் ஆறு இலக்க வரிசை எண்களைக் கொண்டவையாக இருந்தன. மேலும், வாகனம் நிறுத்துபவர்களால் திரும்ப ஒப்படைக்கப்பட்ட 50 ரசீதுகளை பார்வையிட்டதில், அவை அனைத்தும் நான்கு இலக்க வரிசை எண்களைக் கொண்ட ரசீதுகளாக காணப்பட்டன. மேலும், அன்றைய தினம் வாகனம் நிறுத்துபவர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்ட பணமாக ரூ.1,600/- காணப்பட்டது. அங்கு முறையாக பராமரிக்கப்படாத, 1 முதல் 176 பக்கங்கள் கொண்ட வாகன விபரங்கள் அடங்கிய பதிவேடு ஒன்றும் காணப்பட்டது. அதனைத்தொடர்ந்து, அங்கு வசூல் பணியில் இருந்த திரு.கருப்பையா, வயது 55/2026, த/பெ.ராஜமாணிக்கம், வாலாந்தரவை, இராமநாதபுரம் என்பவரை விசாரித்ததில், கடந்த 6 நாட்களாக பேருந்து நிலையத்தின் இடது பக்கம் உள்ள இருசக்கர வாகன நிறுத்துமிடத்தில் வாகனம் நிறுத்துபவர்களிடம் பணம் வசூல் செய்யும் பணியை மேற்கொண்டு வருவதாகவும், தினமும் காலை 07.00 மணி முதல் மாலை 07.00 மணி வரை பணியில் இருப்பதாகவும், தான் வசூலித்த தொகையை நகராட்சியில் பணிபுரியும் திரு.மாரிமுத்து என்பவரிடம் ஒப்படைத்து வருவதாகவும், தன்னை மேற்படி பணிக்கு திரு.ரமேஷ்குமார் என்பவருக்கு தெரிந்த நபர் மூலம் பணியில் சேர்த்ததாகவும், தனக்கு ஒரு நாளைக்கு ரூ.500/- சம்பளமாக திரு.மாரிமுத்து வழங்கி வருவதாகவும், பயன்படுத்தும் ரசீது புத்தகங்கள் காலியாகும்போது திரு.மாரிமுத்து மற்றும் திரு.ரிஷிகேசவன் ஆகியோர் தன்னிடமோ அல்லது திரு.நாகராஜிடமோ கொண்டு வந்து கொடுப்பதாகவும், இராமநாதபுரத்தைச் சேர்ந்த திரு.நாகராஜ் என்பவர் இரவு 07.00 மணி முதல் மறுநாள் காலை 07.00 மணி வரை பணியில் இருப்பதாகவும் தெரிவித்தார். மேலும், திரு.மாரிமுத்து மற்றும் திரு.ரிஷிகேசவன் ஆகியோர் வாகன வசூல் ரசீது கட்டுகளை பணியில் இருக்கும்போது தங்களிடம் கொண்டு வந்து கொடுப்பதாகவும், மேற்படி ரசீது கட்டுகள் உண்மையானவையா அல்லது போலியானவையா என்பது தங்களுக்குத் தெரியாது என்றும், அவர்கள் வழங்கும் ரசீதுகளைப் பயன்படுத்தி வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்வதாகவும் தெரிவித்தார். இது தொடர்பாக மேற்படி நபரை விசாரித்து, அவரது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேற்படி சோதனை 22.09.2026ம் தேதி 15.00 மணி முதல் 16.00 மணி வரை நடைபெற்றது. சோதனையின்போது மேற்படி ரூ.1,600/- பணம், இரண்டு ரசீது கட்டைகள் மற்றும் முறையாக பராமரிக்கப்படாத வாகனப் பதிவேடு - 1 ஆகியவை தொடர் விசாரணைக்காகக்

கைப்பற்றப்பட்டு, பின்னர் மகஜரில் விபரம் குறிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து, மேற்படி புதிய பேருந்து நிலையத்தில் பேருந்துகள் வெளியேறும் நுழைவு வாசலின் வலது பக்கம் உள்ள இருசக்கர வாகன நிறுத்துமிடத்தில் தெற்கு பார்த்தவாறு அமர்ந்து வசூல் செய்து கொண்டிருந்த, பின்னர் பெயர் விபரம் தெரிந்த திரு.ஆனந்தன், துப்புரவு பணி மேற்பார்வையாளர், இராமநாதபுரம் நகராட்சி என்பவரது மேஜையை சோதனை செய்ததில், மேற்படி மேஜையில் பயன்படுத்தப்பட்ட ரசீதாக "இராமநாதபுரம் நகராட்சி புதிய பேருந்து நிலையம் இருசக்கர வாகன கட்டணம், S.No.002301, Dated: 22/9, நாள் 1க்கு ரூ.20, வண்டி எண் 8627, நேரம் 9.5, வசூலிப்பவர் என்.குமரன், ஆணையாளர், இராமநாதபுரம் நகராட்சி" என்று தொடங்கி S.No.002400 வரையிலான மொத்த ரசீது கட்டில், S.No.002301 முதல் S.No.002373 வரை 73 ரசீதுகள் பயன்படுத்தப்பட்ட ஆறு இலக்க வரிசை எண் கொண்ட ரசீது புத்தகத்தின் அடிக்கட்டை - 1, S.No.002288 முதல் S.No.002300 வரை பயன்படுத்தப்பட்ட ஆறு இலக்க வரிசை எண் கொண்ட ரசீது புத்தகத்தின் அடிக்கட்டைத் தாள்கள் - 13 மற்றும் மேற்படி பயன்படுத்தப்பட்ட ரசீதுகளுக்குரிய பணம் ரூ.1,460/- ஆகியவை காணப்பட்டன. மேலும், முறையாக பராமரிக்கப்படாத 1 முதல் 176 பக்கங்கள் கொண்ட வாகன விபரங்கள் அடங்கிய பதிவேடு ஒன்றும் காணப்பட்டது. மேற்படி ரூ.1,460/- பணம், ரசீது புத்தகத்தின் அடிக்கட்டைகள் மற்றும் முறையாக பராமரிக்கப்படாத வாகனப் பதிவேடு - 1 ஆகியவை தொடர் விசாரணைக்காகக் கைப்பற்றப்பட்டு, பின்னர் மகஜரில் விபரம் குறிக்கப்பட்டது. மேலும், அந்த மேஜையின் முதல் டிராயரைத் திறந்து சோதனை செய்ததில், வாகனம் நிறுத்துபவர்களால் திரும்ப ஒப்படைக்கப்பட்ட மொத்தம் 1,956 ரசீதுகளைப் பார்வையிட்டதில், 1,577 ரசீதுகள் நான்கு இலக்க வரிசை எண்களைக் கொண்டவையாகவும், 379 ரசீதுகள் ஆறு இலக்க வரிசை எண்களைக் கொண்டவையாகவும் காணப்பட்டன. மேற்படி ரசீதுகள் தொடர் விசாரணைக்காகக் கைப்பற்றப்பட்டு, பின்னர் மகஜரில் விபரம் குறிக்கப்பட்டது. பின்னர், அதே மேஜையின் முதல் டிராயருக்கு கீழே பூட்டப்பட்டிருந்த மற்றொரு அறை குறித்து விசாரித்தபோது, அந்த அறை திரு.மாரிமுத்துவின் பொறுப்பில் இருப்பதாகவும், அதற்கான சாவி அவரிடமே இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, திரு.மாரிமுத்துவிடம் தகவல் தெரிவித்து, சாவியுடன் சோதனை நடைபெறும் இடத்திற்கு வருமாறு கூறியதன் பேரில், அவர் சுமார் 16.15 மணிக்கு அங்கு ஆஜரானார். அவரது மூலம் மேற்படி டிராயரைத் திறந்து பார்த்ததில், "ஆர்.எம்.செந்தில்குமார் நகை மாளிகை, 52, சுவாமி விவேகானந்தர் சாலை, இராமநாதபுரம்" என குறிப்பிடப்பட்டிருந்த மூன்று அறைகள் கொண்ட சிவப்பு நிற ரெக்சின் கைப்பை ஒன்று காணப்பட்டது. அந்த கைப்பையின் முதல் அறையைச் சோதனை செய்ததில், ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட இராமநாதபுரம் நகராட்சி புதிய பேருந்து நிலையம் இருசக்கர வாகன கட்டணத்திற்கான நான்கு இலக்க வரிசை எண் கொண்ட S.No.1001 முதல் S.No.1100 வரையிலான ரசீது புத்தகத்தின் அடிக்கட்டை - 1, S.No.1101 முதல் S.No.1200 வரையிலான ரசீது புத்தகத்தின் அடிக்கட்டை - 1, S.No.1401 முதல் S.No.1500 வரையிலான ரசீது புத்தகத்தின் அடிக்கட்டை - 1, S.No.1501 முதல் S.No.1600 வரையிலான ரசீது புத்தகத்தின் அடிக்கட்டை - 1, S.No.1701 முதல் S.No.1800

வரையிலான ரசீது புத்தகத்தின் அடிக்கட்டை - 1, S.No.1901 முதல் S.No.2000 வரையிலான ரசீது புத்தகத்தின் அடிக்கட்டை - 1, S.No.1601 முதல் S.No.1700 வரையிலான ரசீது புத்தகத்தின் அடிக்கட்டை - 2 மற்றும் S.No.1801 முதல் S.No.1900 வரையிலான ரசீது புத்தகத்தின் அடிக்கட்டை - 2 என மொத்தம் 10 கட்டைகள் காணப்பட்டன. மேற்படி 10 கட்டைகளும் தொடர் விசாரணைக்காகக் கைப்பற்றப்பட்டு, பின்னர் மகஜரில் விபரம் குறிக்கப்பட்டது. அந்த கைப்பையின் மற்றொரு அறையைச் சோதனை செய்ததில், இராமநாதபுரம் நகராட்சி புதிய பேருந்து நிலையம் இருசக்கர வாகன கட்டணத்திற்கான நான்கு இலக்க வரிசை எண் கொண்ட S.No.2001 முதல் S.No.2097 வரையிலான ரசீது புத்தகத்தின் அடிக்கட்டை - 1 மற்றும் அதனுடன் ரப்பர் பேண்டால் சுற்றி வைக்கப்பட்டிருந்த ரூ.1,430/- பணம், S.No.2101 முதல் S.No.2198 வரையிலான ரசீது புத்தகத்தின் அடிக்கட்டை - 1 மற்றும் அதனுடன் ரப்பர் பேண்டால் சுற்றி வைக்கப்பட்டிருந்த ரூ.1,120/- பணம், S.No.2201 முதல் S.No.2298 வரையிலான ரசீது புத்தகத்தின் அடிக்கட்டை - 1 மற்றும் அதனுடன் ரப்பர் பேண்டால் சுற்றி வைக்கப்பட்டிருந்த ரூ.1,150/- பணம், S.No.2301 முதல் S.No.2398 வரையிலான ரசீது புத்தகத்தின் அடிக்கட்டை - 1 மற்றும் அதனுடன் ரப்பர் பேண்டால் சுற்றி வைக்கப்பட்டிருந்த ரூ.2,840/- பணம், S.No.3001 முதல் S.No.3100 வரையிலான ரசீது புத்தகத்தின் அடிக்கட்டை - 1 மற்றும் அதனுடன் ரப்பர் பேண்டால் சுற்றி வைக்கப்பட்டிருந்த ரூ.1,250/- பணம், S.No.3101 முதல் S.No.3200 வரையிலான ரசீது புத்தகத்தின் அடிக்கட்டை - 1 மற்றும் அதனுடன் ரப்பர் பேண்டால் சுற்றி வைக்கப்பட்டிருந்த ரூ.1,990/- பணம், S.No.3201 முதல் S.No.3300 வரையிலான ரசீது புத்தகத்தின் அடிக்கட்டை - 1 மற்றும் அதனுடன் ரப்பர் பேண்டால் சுற்றி வைக்கப்பட்டிருந்த ரூ.810/- பணம், S.No.3301 முதல் S.No.3400 வரையிலான ரசீது புத்தகத்தின் அடிக்கட்டை - 1 மற்றும் அதனுடன் ரப்பர் பேண்டால் சுற்றி வைக்கப்பட்டிருந்த ரூ.600/- பணம், S.No.3401 முதல் S.No.3500 வரையிலான ரசீது புத்தகத்தின் அடிக்கட்டை - 1 மற்றும் அதனுடன் ரப்பர் பேண்டால் சுற்றி வைக்கப்பட்டிருந்த ரூ.1,560/- பணம் ஆகியவை காணப்பட்டன. மேற்படி கட்டைகள் மற்றும் அவற்றுடன் சுற்றி வைக்கப்பட்டிருந்த மொத்தம் ரூ.12,750/- பணம் தொடர் விசாரணைக்காகக் கைப்பற்றப்பட்டு, பின்னர் மகஜரில் விபரம் குறிக்கப்பட்டது. மேலும், அதே கைப்பையின் மூன்றாவது அறையைச் சோதனை செய்ததில், "இராமநாதபுரம் நகராட்சி" என பொறிக்கப்பட்ட ரோஸ் நிற ரவுண்ட் சீல் மற்றும் "Faber Castell" என்ற பெயர் கொண்ட ஸ்டாம்ப் பேட் ஆகியவை காணப்பட்டன. மேற்படி இரண்டு பொருட்களும், "ஆர்.எம்.செந்தில்குமார் நகை மாளிகை, 52, சுவாமி விவேகானந்தர் சாலை, இராமநாதபுரம்" என குறிப்பிடப்பட்டிருந்த மூன்று அறைகள் கொண்ட சிவப்பு நிற ரெக்சின் கைப்பையும் தொடர் விசாரணைக்காகக் கைப்பற்றப்பட்டு, பின்னர் மகஜரில் விபரம் குறிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து, வலது பக்கம் உள்ள இருசக்கர வாகன நிறுத்துமிடத்தில் வசூல் செய்து கொண்டிருந்த திரு.ஆனந்தன், வயது 55/2026, த/பெ.சாத்தன், துப்புரவு மேற்பார்வையாளர், இராமநாதபுரம் நகராட்சி என்பவரை விசாரித்ததில், தான் கடந்த 25 வருடங்களாக நகராட்சியின் சுகாதாரப் பிரிவில் நிரந்தர பணியாளராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 01.09.2026ம் தேதி முதல் நகராட்சி சுகாதார அலுவலர்

அவர்களின் உத்தரவின்பேரில் பேருந்து நிலையத்தின் வலது பக்கம் உள்ள இருசக்கர வாகன நிறுத்துமிடத்தில் வாகனம் நிறுத்துபவர்களிடமிருந்து பணம் வசூல் செய்யும் பணியை மேற்கொண்டு வருவதாகவும், தினமும் காலை 07.00 மணி முதல் மாலை 07.00 மணி வரை பணியில் இருப்பதாகவும், தான் வசூலித்த தொகையை நகராட்சியில் பணிபுரியும் திரு.மாரிமுத்து மற்றும் திரு.ரிஷிகேசவன் ஆகியோரிடம் ஒப்படைத்து விடுவதாகவும், அதற்காக அவர்கள் தினமும் ரூ.200/- வழங்குவதாகவும், ரசீது புத்தகங்களை திரு.மாரிமுத்து மற்றும் திரு.ரிஷிகேசவன் ஆகியோர் தன்னிடம் கொடுப்பதாகவும், வழுதூரைச் சேர்ந்த திரு.சக்திவேல் என்பவர் இரவு 07.00 மணி முதல் மறுநாள் காலை 07.00 மணி வரை பணியில் இருப்பதாகவும் தெரிவித்தார். மேலும், திரு.மாரிமுத்து மற்றும் திரு.ரிஷிகேசவன் ஆகியோர் வாகன வசூல் ரசீது கட்டுகளை தான் பணியில் இருக்கும்போது தன்னிடம் கொண்டு வந்து கொடுப்பதாகவும், நான்கு இலக்க வரிசை எண் கொண்ட S.No.1601 முதல் S.No.1700 வரையிலான ரசீது புத்தகத்தின் அடிக்கட்டை – 2 மற்றும் S.No.1801 முதல் S.No.1900 வரையிலான ரசீது புத்தகத்தின் அடிக்கட்டை – 2 ஆகியவை போலியானவை என்பது தனக்குத் தெரிந்திருந்தாலும், அவை குறித்து எதுவும் கண்டுகொள்ள வேண்டாம் என ஏற்கனவே வருவாய் ஆய்வாளர் திரு.ரமேஷ்குமார் மற்றும் வருவாய் உதவியாளர்கள் திரு.மாரிமுத்து மற்றும் திரு.ரிஷிகேசவன் ஆகியோர் தன்னிடம் கூறியதாகவும், அவர்கள் தனக்கு தினமும் ரூ.200/- செலவுக்காக வழங்கி வந்ததாலும், தான் மேற்படி ரசீது கட்டுகளின் உண்மைத்தன்மை குறித்து எதுவும் கண்டுகொள்ளாமல் இருந்ததாகவும் தெரிவித்தார். இது தொடர்பாக மேற்படி நபரை விசாரித்து, அவரது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து, அங்கிருந்த திரு.மாரிமுத்து என்பவரை விசாரித்ததில், அவரது பெயர் மாரிமுத்து, வயது 38/2026, த/பெ.காளிமுத்து என்றும், கடந்த 2023ம் ஆண்டு மே மாதம் முதல் இராமநாதபுரம் நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். நகராட்சி ஆணையாளர் திரு.குமரன் (கூ.மு.பொ.) அவர்கள் நக.எண்.934/2025/A2, நாள் 31.08.2026ன் மூலம் இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் இருசக்கர வாகன நிறுத்துமிடங்களில் துறை ரீதியாக வசூல் பணி மேற்கொள்ள தனக்கு உத்தரவு வழங்கியதாகவும், தான் A2 பிரிவு எழுத்தர் திருமதி.நாகலெட்சுமி அவர்களிடமிருந்து ரசீது புத்தகங்களைப் பெற்று, பணம் வசூல் செய்பவர்களிடம் வழங்குவதாகவும், வசூல் செய்த நபர்களிடமிருந்து பணத்தைப் பெற்று நகராட்சி காசாளரிடம் ஒப்படைத்து அதற்குரிய ரசீதைப் பெற்றுக்கொள்வதாகவும் தெரிவித்தார். மேலும், இருசக்கர வாகன நிறுத்துமிடத்தில் வசூல் பணிக்காக நியமிக்கப்பட்ட நபர்கள் குறித்து விசாரித்ததில், நகராட்சி ஆணையாளர் அவர்கள் திரு.ஆனந்தன், துப்புரவு மேற்பார்வையாளர் மற்றும் திரு.முருகேசன், துப்புரவு பணியாளர் ஆகியோரை காலை 06.00 மணி முதல் மாலை 06.00 மணி வரையும், அலுவலக உதவியாளர்களான திரு.பழனிமுருகன் மற்றும் திரு.சந்திரசேகரன் ஆகியோரை மாலை 06.00 மணி முதல் மறுநாள் காலை 06.00 மணி வரையும் நியமித்து, 01.09.2026ம் தேதி முதல் பணிபுரிய கடந்த 31.08.2026ம் தேதி உத்தரவு பிறப்பித்ததாகவும், மேற்படி நபர்கள் முதல் 5 நாட்கள் பணிக்கு

வந்ததாகவும், பின்னர் திரு.ஆனந்தன் தவிர மற்ற நபர்கள் பணிக்கு வராததால், தான் வருவாய் ஆய்வாளர் திரு.ரமேஷ்குமார் அவர்களிடம் மேற்படி விபரத்தைத் தெரிவித்ததாகவும் கூறினார். அதற்கு அவர், வேறு நபர்களை நியமித்து, அவர்களுக்கு ஒரு நாளைக்கு ரூ.500/- வழங்கி வசூல் பணியை மேற்கொள்ளுமாறு கூறியதாகவும், அதன்பேரில் திரு.ரமேஷ்குமார் அவர்களே திரு.கருப்பையா மற்றும் திரு.நாகராஜ் ஆகிய இருவரை அனுப்பி வைத்ததாகவும், தான் திரு.சக்திவேல் என்பவரை கூடுதலாக வசூல் பணிக்கு நியமித்ததாகவும் தெரிவித்தார். பின்னர், பேருந்து நிலையத்தின் வலது மற்றும் இடது பக்கங்களில் உள்ள இருசக்கர வாகன நிறுத்துமிடங்களில் கைப்பற்றப்பட்ட நான்கு இலக்க மற்றும் ஆறு இலக்க வரிசை எண் கொண்ட ரசீது புத்தகங்களின் அடிக்கட்டைகள் குறித்து விசாரித்ததில், தனிநபர்களை பணிக்கு அமர்த்தியதால் அவர்களுக்கு தினசரி சம்பளம் வழங்க வேண்டியிருந்ததால், வருவாய் ஆய்வாளர் திரு.ரமேஷ்குமார், கேணிக்கரையில் உள்ள சன் பிரிண்டர்ஸ் உரிமையாளர் திரு.ஜோசப் அவர்களிடம் முதலில் 100 ரசீதுகள் கொண்ட 12 கட்டுகள், அதாவது 1,200 போலி ரசீதுகளை நான்கு இலக்க வரிசை எண்ணில் அச்சிடச் செய்ததாகவும், பின்னர் 4,000 போலி ரசீதுகளை (40 கட்டுகள் × 100) அச்சிடச் செய்ததாகவும் தெரிவித்தார். மேற்படி ரசீதுகளுக்கான அச்சிடும் தொகையான ரூ.4,000/-ஐ தானே வருவாய் உதவியாளர் திரு.ரிஷிகேசவன் மூலம் சன் பிரிண்டர்ஸ் உரிமையாளர் திரு.ஜோசப் அவர்களிடம் கொடுத்து, மேற்படி ரசீது கட்டுகளை தானும் வருவாய் உதவியாளர் திரு.ரிஷிகேசவனும் பெற்றுக்கொண்டதாகவும் தெரிவித்தார். மேற்படி மொத்தம் 5,200 போலி ரசீதுகளை வாகன வசூல் பணியில் ஈடுபட்ட நபர்களிடம் வழங்கி, அவற்றின் மூலம் இதுவரை ரூ.1,04,000/- வசூல் செய்யப்பட்டதாகவும், அதிலிருந்து வசூல் பணியில் ஈடுபட்ட நபர்களுக்கு சம்பளம் வழங்கியது போக மீதமுள்ள பணத்தை தானும், வருவாய் ஆய்வாளர் திரு.ரமேஷ்குமார் மற்றும் வருவாய் உதவியாளர் திரு.ரிஷிகேசவன் ஆகியோரும் எடுத்துக்கொள்வதாகவும் தெரிவித்தார். மேலும், திரு.ஆனந்தன், துப்புரவு பணி மேற்பார்வையாளருக்கு தினமும் ரூ.200/- வழங்கி வருவதாகவும் தெரிவித்தார். மேலும், போலி ரசீதுகள் காலியாகியதால், வருவாய் ஆய்வாளர் திரு.ரமேஷ்குமார் அவர்களின் அறிவுரைப்படி, 21.09.2026ம் தேதி காலை தனது அலைபேசி எண் 7904330460 இலிருந்து சன் பிரிண்டர்ஸ் உரிமையாளர் திரு.ஜோசப் அவர்களின் அலைபேசி எண் 9865444797க்கு தொடர்பு கொண்டு மேலும் 4,000 போலி ரசீதுகளை தயார் செய்து வைக்குமாறு கேட்டுக்கொண்டதாகவும் தெரிவித்தார். பின்னர், ஆறு இலக்க வரிசை எண் கொண்ட அசல் ரசீதுகள் குறித்து விசாரித்ததில், அவை TIRUNELVELI DISTRICT MULTI PURPOSE SERVICE INDUSTRIAL CO-OPERATIVE SOCIETY LTD என்ற நிறுவனத்திடமிருந்து அச்சிடப்பட்டு, நகராட்சி மூலம் பெறப்பட்டவை என்றும், ஆறு இலக்க வரிசை எண் கொண்ட அசல் ரசீதுகள் மூலம் வசூலிக்கப்படும் தொகையை மட்டும் தான் காசாளர் திரு.அந்தோணி ஜான் பீட்டர் அவர்களிடம் ஒப்படைப்பதாகவும் தெரிவித்தார். இருசக்கர வாகன நிறுத்துமிடத்தில் இருந்த "இராமநாதபுரம் நகராட்சி" என பொறிக்கப்பட்ட ரவுண்ட் சீல் குறித்து விசாரித்தபோது, அந்த சீலை 21.09.2026ம் தேதி இராமநாதபுரம் நகராட்சி C1 இருக்கையிலிருந்து

எடுத்துக் கொண்டு வந்ததாகவும் தெரிவித்தார். மேலும், தன்னிடம் உள்ள மீதமுள்ள ரசீது புத்தகங்களின் அடிக்கட்டைகள் குறித்து விசாரித்தபோது, அவை தனது வீட்டில் இருப்பதாகத் தெரிவித்தார். இது தொடர்பாக மேற்படி நபரை விசாரித்து, அவரது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. பின்னர், வருவாய் ஆய்வாளர் திரு.ரமேஷ்குமார் மற்றும் சன் பிரிண்டர்ஸ் உரிமையாளர் திரு.ஜோசப் ஆகியோர் விசாரணைக்காக இராமநாதபுரம் நகராட்சி அலுவலகத்திற்கு வருமாறு தகவல் தெரிவிக்கப்பட்டது. மேலும், முன்னதாக இராமநாதபுரம் நகராட்சி பொறுப்பு ஆணையாளர் அவர்களை அலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, இருசக்கர வாகன நிறுத்துமிடங்களில் வசூல் பணி தொடர்ந்து நடைபெறுவதற்காக மாற்றுப் பணியாளர்களை நியமிக்க அறிவுறுத்தியதன் பேரில், இராமநாதபுரம் நகராட்சி அலுவலக உதவியாளர்களான திரு.பழனிமுருகன் மற்றும் திரு.சந்திரசேகர் ஆகியோர் ஆஜரானார்கள். அவர்களிடம் மேற்படி இருசக்கர வாகன நிறுத்துமிடங்களின் வசூல் பணிக்கு தனித்தனியாக பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. மேற்படி சோதனை 22.09.2026ம் தேதி 16.05 மணி முதல் 18.15 மணி வரை நடைபெற்றது. மேற்படி விவரங்கள் அனைத்தும் பின்னர் தயாரிக்கப்பட்ட மகஜரில் குறிக்கப்பட்டது. மேலும், அங்கு சோதனை மகஜர் தயாரிக்க ஏதுவான சூழ்நிலை இல்லாததால், இச்சோதனையின்போது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் பணத்துடன், திரு.கருப்பையா, திரு.ஆனந்தன் மற்றும் வருவாய் உதவியாளர் திரு.மாரிமுத்து ஆகியோருடன் 18.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்திற்கு வந்து, அங்கு பணியிலிருந்த காசாளர் திரு.அந்தோணி ஜான் பீட்டர் அவர்களிடம் எங்கள் குழுவினரை அறிமுகப்படுத்தி, திடீர் சோதனையின் விபரத்தைத் தெரிவித்து, தொடர்ந்து ஆஜரில் இருக்குமாறு அவரிடம் தெரிவித்தோம். பின்னர், இருசக்கர வாகன நிறுத்துமிடங்களில் வசூல் செய்யப்பட்ட பணத்தை நகராட்சி அலுவலகத்தில் செலுத்துவது தொடர்பாக பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடு குறித்து வருவாய் உதவியாளர் திரு.மாரிமுத்துவிடம் விசாரித்ததில், கடந்த 01.09.2026ம் தேதி முதல் 18.09.2026ம் தேதி வரை தேதி வாரியாக பணம் செலுத்தியதாகவும், அதற்கான 0080158, 0080190 ஆகிய தொடர் எண்களைக் கொண்ட, பக்கம் 1 முதல் 92 வரையிலான பதிவேடு மற்றும் காசாளரிடம் பணம் செலுத்தியதற்காக அவர் வழங்கிய 10 ரசீதுகள் ஆகியவற்றை ஆஜர்படுத்தினார். மேற்படி பதிவேடு மற்றும் 10 ரசீதுகள் தொடர் விசாரணைக்காகக் கைப்பற்றப்பட்டு, பின்னர் மகஜரில் விபரம் குறிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து, நகராட்சி அலுவலகத்தில் விசாரணைக்கு ஆஜரான திரு.ரமேஷ்குமார், வயது 36/2026, த/பெ.கருப்பையா, வருவாய் ஆய்வாளர், இராமநாதபுரம் நகராட்சி என்பவரை விசாரித்ததில், தான் கடந்த 19.06.2026ம் தேதி முதல் வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், நகராட்சி ஆணையாளர் திரு.குமரன் (கூ.மு.பொ.) அவர்கள் ந.க.எண்.934/2025/A2, நாள் 31.08.2026ன் மூலம் இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் இருசக்கர வாகன நிறுத்துமிடங்களில் துறை ரீதியாக வசூல் பணி மேற்கொள்ள திரு.ஆனந்தன், துப்புரவு மேற்பார்வையாளர் மற்றும் திரு.முருகேசன், துப்புரவு பணியாளர் ஆகியோரை காலை 06.00 மணி முதல் மாலை 06.00 மணி வரையும், அலுவலக உதவியாளர்களான திரு.பழனிமுருகன் மற்றும்

திரு.சந்திரசேகரன் ஆகியோரை மாலை 06.00 மணி முதல் மறுநாள் காலை 06.00 மணி வரையும் நியமித்துள்ளதாகவும், வருவாய் உதவியாளர் திரு.மாரிமுத்து மேற்படி தொகையை வசூலித்து நகராட்சியில் செலுத்த வேண்டும் என்றும், வருவாய் உதவியாளரால் சலான் பதிவேட்டில் பதிவு செய்யப்படும் விபரங்களில் தான் வருவாய் ஆய்வாளராக கையொப்பமிட்டு, தொகை செலுத்தப்படுகிறதா என்பதையும், வசூல் செய்யப்பட்ட தொகை முறையாக காசாளரிடம் செலுத்தப்படுகிறதா என்பதையும் மேற்பார்வை செய்ய வேண்டும் என்றும் தெரிவித்தார். மேலும், திரு.ஆனந்தன் தவிர மற்ற நபர்கள் பணிக்கு வராததால், வருவாய் உதவியாளர் திரு.மாரிமுத்து தன்னிடம் மேற்படி விபரத்தைத் தெரிவித்ததாகவும், அதன்பேரில் வேறு நபர்களை நியமித்து, அவர்களுக்கு ஒரு நாளைக்கு ரூ.500/- வழங்கி வசூல் பணியை மேற்கொள்ளுமாறு தான் கூறியதாகவும், பின்னர் திரு.கருப்பையா மற்றும் திரு.நாகராஜ் ஆகிய இருவரையும் தானே அனுப்பி வைத்ததாகவும், அதன் பின்னர் திரு.மாரிமுத்து, திரு.சக்திவேல் என்பவரை நியமித்ததாகவும் தெரிவித்தார். பின்னர், பேருந்து நிலையத்தின் வலது மற்றும் இடது பக்கங்களில் உள்ள இருசக்கர வாகன நிறுத்துமிடங்களில் கைப்பற்றப்பட்ட நான்கு இலக்க மற்றும் ஆறு இலக்க வரிசை எண் கொண்ட ரசீது புத்தகங்களின் அடிக்கட்டைகள் குறித்து விசாரித்ததில், தனிநபர்களை பணிக்கு அமர்த்தியதால் அவர்களுக்கு தினசரி சம்பளம் வழங்க வேண்டியிருந்ததால், தான் ஏற்கனவே கேணிக்கரையில் உள்ள சன் பிரிண்டர்ஸ் உரிமையாளர் திரு.ஜோசப் ஜெயராஜன் என்பவரிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, நான்கு இலக்க வரிசை எண்ணில் 1,200 போலி ரசீதுகளை (12 கட்டுகள் × 100) அச்சிடச் சொன்னதாகவும், அதற்குரிய ரூ.1,200/- தொகையை தானே வழங்கியதாகவும் தெரிவித்தார். பின்னர் மீண்டும் திரு.ஜோசப் ஜெயராஜன் அவர்களிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு 4,000 போலி ரசீதுகளை (40 கட்டுகள் × 100) அச்சிடச் சொன்னதாகவும், அதற்குரிய ரூ.4,000/- தொகையை வருவாய் உதவியாளர் திரு.ரிஷிகேசவனிடம் கொடுத்து, ஜோசப்பிடம் வழங்கச் சொன்னதாகவும் தெரிவித்தார். மேற்படி போலி ரசீதுகள் மூலம் வசூல் செய்த தொகையில், பணியில் ஈடுபட்ட நபர்களுக்கு சம்பளம் வழங்கியது போக, மீதமுள்ள தொகையை தானும், வருவாய் உதவியாளர் திரு.மாரிமுத்துவும், வருவாய் உதவியாளர் திரு.ரிஷிகேசவனும் எடுத்துக்கொண்டதாக தெரிவித்தார். இது தொடர்பாக மேற்படி நபரை விசாரித்து, அவரது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து, நகராட்சி அலுவலகத்தில் விசாரணைக்கு ஆஜரான திரு.ரிஷிகேசவன், வயது 47/2026, த/பெ.கணேசன், வருவாய் உதவியாளர், இராமநாதபுரம் நகராட்சி என்பவரை விசாரித்ததில், தான் கடந்த 2013ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், நகராட்சி ஆணையாளர் திரு.குமரன் (கூ.மு.பொ.) அவர்கள் ந.க.எண்.934/2025/A2, நாள் 31.08.2026ன் மூலம் இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் இருசக்கர வாகன நிறுத்துமிடங்களில் துறை ரீதியாக வசூல் பணி மேற்கொள்ள திரு.ஆனந்தன், துப்புரவு மேற்பார்வையாளர் மற்றும் திரு.முருகேசன், துப்புரவு பணியாளர் ஆகியோரை காலை 06.00 மணி முதல் மாலை 06.00 மணி வரையும், அலுவலக

உதவியாளர்களான திரு.பழனிமுருகன் மற்றும் திரு.சந்திரசேகரன் ஆகியோரை மாலை 06.00 மணி முதல் மறுநாள் காலை 06.00 மணி வரையும் நியமித்துள்ளதாகவும், திரு.மாரிமுத்து, வருவாய் உதவியாளர், மேற்படி தொகையை வசூலித்து நகராட்சியில் செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார். மேலும், இந்த வசூல் தொடர்பாக TIRUNELVELI DISTRICT MULTI PURPOSE SERVICE INDUSTRIAL CO-OPERATIVE SOCIETY LTD என்ற நிறுவனத்திடமிருந்து அசல் ரசீதுகள் பெறப்பட்ட விபரம் தனக்குத் தெரியும் என்றும், வருவாய் உதவியாளர் திரு.மாரிமுத்துவும், வருவாய் ஆய்வாளர் திரு.ரமேஷ்குமாரும், திரு.ஜோசப் ஜெயராஜன் நடத்தி வரும் சன் பிரிண்டர்ஸ் பைண்டிங்கில் இருசக்கர வாகன நிறுத்துமிடத்திற்கான நான்கு இலக்க வரிசை எண் கொண்ட ரசீது புத்தகங்களை அச்சிடச் செய்ததாகவும் தெரிவித்தார். பின்னர், திரு.ரமேஷ்குமார் தன்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, சன் பிரிண்டர்ஸ் பைண்டிங் உரிமையாளர் திரு.ஜோசப் ஜெயராஜன் என்பவரிடம் கணக்கில் இல்லாத ரசீது புத்தகங்களுக்கான கூலியாக ரூ.4,000/- பணத்தை கொடுத்து, அவர் வழங்கும் 10 கட்டு ரசீது புத்தகங்களை வாங்கி வருமாறு கூறியதன் பேரில், தான் திரு.மாரிமுத்துவுடன் சென்று ரூ.4,000/- பணத்தை ஜோசப்பிடம் கொடுத்து, ரசீது புத்தகங்களை வாங்கி திரு.மாரிமுத்துவிடம் கொடுத்ததாகவும் தெரிவித்தார். மேற்படி வாகன நிறுத்த ரசீது புத்தகங்கள் போலியானவை என்பது தனக்குத் தெரியும் என்றும் தெரிவித்தார். மேலும், சில நேரங்களில் தேவைப்படும்போது, போலி ரசீது கட்டுகளை எடுத்துக்கொண்டு, திரு.ரமேஷ்குமார் மற்றும் திரு.மாரிமுத்து ஆகியோர் கூறியதன்பேரில், இருசக்கர வாகன நிறுத்துமிடங்களில் பணிபுரியும் நபர்களிடம் அவற்றை கொடுத்துவிட்டு வருவதாகவும், மேலும் திரு.மாரிமுத்து மற்றும் வருவாய் ஆய்வாளர் திரு.ரமேஷ்குமார் ஆகியோர் தனக்கு போலி ரசீதுகளை வாங்கிக் கொடுக்கும்போது, தனக்கு செலவிற்காக பணம் வழங்குவார்கள் என்றும் தெரிவித்தார். இது தொடர்பாக மேற்படி நபரை விசாரித்து, அவரது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து, நகராட்சி அலுவலகத்தில் விசாரணைக்கு ஆஜரான திரு.ஜோசப் ஜெயராஜன், வயது 68/2026, த/பெ.மனுவேல்பிள்ளை என்பவரை விசாரித்ததில், தனது சொந்த ஊர் இலங்கை, யாழ்ப்பாணம் என்றும், கடந்த 1996ம் ஆண்டிலிருந்து இராமநாதபுரத்தில் அகதியாக வசித்து வருவதாகவும், சுமார் 30 வருடங்களாக சன் பிரிண்டர்ஸ் பைண்டிங் தொழில் செய்து வருவதாகவும் தெரிவித்தார். சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர், நகராட்சியில் பணிபுரியும் திரு.ரமேஷ்குமார், அவரது அலைபேசி எண் 9789654121 இலிருந்து தனது அலைபேசி எண் 9865444797க்கு தொடர்பு கொண்டு, இருசக்கர வாகன நிறுத்துமிடத்திற்கான நான்கு இலக்க வரிசை எண் கொண்ட 12 ரசீது புத்தகங்களை அச்சிட்டு கொடுக்குமாறு கேட்டுக்கொண்டதன்பேரில், அவற்றை அச்சிட்டு கொடுத்ததாகவும், அதற்கான கூலியாக ரூ.1,200/- தொகையை வருவாய் ஆய்வாளர் திரு.ரமேஷ்குமாரிடமிருந்து பெற்றுக்கொண்டதாகவும் தெரிவித்தார். பின்னர், இம்மாத தொடக்கத்தில், வருவாய் ஆய்வாளர் திரு.ரமேஷ்குமார் கேட்டுக்கொண்டதன்பேரில் மீண்டும் 40 ரசீது புத்தகங்களைத் தயாரித்து, அதற்கான கூலியாக ரூ.4,000/- தொகையை நகராட்சியில் பணிபுரியும்

திரு.ரிஷிகேசவன் தன்னிடம் கொடுத்ததாகவும், பின்னர் 40 ரசீது புத்தகங்களை திரு.ரிஷிகேசவன் மற்றும் திரு.மாரிமுத்து ஆகியோர் வாங்கிச் சென்றதாகவும் தெரிவித்தார். மேற்படி ரசீது கட்டுகளை எந்தவித கடிதம் அல்லது உத்தரவு இல்லாமல் அச்சிட்டு வழங்குவது குறித்து அவர்களிடம் கேட்டபோது, "உங்களுக்குத்தான் பணம் கொடுக்கிறோம்ல, இதைப் பற்றி ஏதும் கண்டுகிடாதீங்க" என மூவரும் கூறியதாக தெரிவித்தார். மேலும், 21.09.2026ம் தேதி நகராட்சியில் பணிபுரியும் திரு.மாரிமுத்து தன்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, மீண்டும் 40 ரசீது புத்தகங்கள் தேவைப்படுவதாகவும், அவற்றை S.No.002401 என்ற ஆறு இலக்க வரிசை எண்ணிலிருந்து அச்சிட்டு வழங்குமாறும் கேட்டுக்கொண்டதாக தெரிவித்தார். அதன்பேரில், தான் இராமநாதபுரம் அரண்மனை முகவை ஆப்செட் பிரிண்டர்ஸில் அச்சிட்டு, S.No.002401 முதல் S.No.002800 வரையிலான 4 ரசீது புத்தகங்களைத் தயாரித்து வைத்ததாகவும், மீதமுள்ள ரசீதுகளை 900 முழு சீட்டுகளாக வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். இந்நிலையில், காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள் ரசீது அச்சிட்ட விபரம் குறித்து விசாரணைக்காக இராமநாதபுரம் நகராட்சி அலுவலகத்திற்கு வருமாறு தகவல் தெரிவித்ததன்பேரில், அங்கு ஆஜரானதாகவும், மேற்படி ரசீதுகளை நகராட்சி ஆணையாளரின் உரிய அனுமதி ஆணை பெற்று அச்சிட்டு வழங்க வேண்டும் என்பது தனக்குத் தெரியும் என்றும், ஆனால் வருவாய் ஆய்வாளர் திரு.ரமேஷ்குமார் அவர்களின் நிர்பந்தத்தின் அடிப்படையிலேயே அவற்றை அச்சிட்டு வழங்கியதாகவும் தெரிவித்தார். மேற்படி 4 ரசீது புத்தகங்கள் மற்றும் ரசீதுகளாக அச்சிடப்பட்ட 900 முழு சீட்டுகள் கைப்பற்றப்பட்டு, அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அவரது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து, முகவை பிரிண்டர்ஸ் நடத்தி வரும் திரு.செந்தில்குமார், வயது 40/2026, த/பெ.முனியசாமி என்பவரை இராமநாதபுரம் நகராட்சி அலுவலகத்திற்கு விசாரணைக்காக வரவழைத்து விசாரித்ததில், தான் கடந்த 20 வருடங்களாக இராமநாதபுரம் அலங்காச்சேரி தெருவில் "முகவை ஆப்செட் பிரிண்டர்ஸ்" என்ற பெயரில் கடை நடத்தி வருவதாகவும், சன் பிரிண்டர்ஸ் நடத்தி வரும் திரு.ஜோசப், "அபிஸ்ரீ பிரிண்டர்ஸ்" என்ற கடையின் மூலம் இருசக்கர வாகன நிறுத்துமிட ரசீதுக்கான கம்ப்யூட்டர் டிசைனிங் புரூப் ஒன்றைத் தயாரித்து தன்னிடம் கொடுத்ததாகவும் தெரிவித்தார். மேற்படி புரூப்பின் அடிப்படையில் முதலில் 1,000 முழு சீட்டுகளும், பின்னர் சிறிது நாட்கள் கழித்து மேலும் 1,000 முழு சீட்டுகளும் அச்சிட்டு, திரு.ஜோசப் அவர்களிடம் கொடுத்ததாகவும் தெரிவித்தார். சன் பிரிண்டர்ஸ் நடத்தி வரும் திரு.ஜோசப் தன்னிடம் வழங்கிய இருசக்கர வாகன நிறுத்துமிட ரசீதுக்கான கம்ப்யூட்டர் டிசைனிங் புரூப்பையும் ஆஜர்படுத்தினார். மேற்படி புரூப் தொடர் விசாரணைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது. அதனைத்தொடர்ந்து, நகராட்சி அலுவலகத்தில் பணியிலிருந்த காசாளர் திரு.அந்தோணி ஜான் பீட்டர் அவர்களிடம் இருசக்கர வாகன நிறுத்துமிட கட்டண ரசீது புத்தகங்கள் தொடர்பான விபரங்களை விசாரித்ததில், இராமநாதபுரம் நகராட்சி கூடுதல் பொறுப்பு ஆணையாளர் திரு.குமரன் அவர்கள் அனுமதி வழங்கியதாக வருவாய் ஆய்வாளர் திரு.ரமேஷ்குமார் எழுத்து மூலமாக குறிப்புரை அளித்ததன் பேரில், தான் TIRUNELVELI DISTRICT MULTI PURPOSE

SERVICE INDUSTRIAL CO-OPERATIVE SOCIETY LTD என்ற நிறுவனத்திடம் அலைபேசி மூலம் 30,000 ரசீதுகள் (300 ரசீது புத்தகங்கள்) ஆர்டர் செய்து, அவற்றை பெற்றுக்கொண்டதாக தெரிவித்தார். மேற்படி ரசீதுகளுக்கான இன்வாய்ஸ் கிடைக்காததால், அவற்றை Stock Register-ல் பதிவு செய்யாமல், இதற்கென தனியாக ஒரு பதிவேடு பராமரிக்கப்பட்டதாகவும், அதன்படி 31.08.2026 முதல் 07.09.2026ம் தேதி வரை 20 ரசீது புத்தகங்களை A2 பிரிவு எழுத்தர் திருமதி.நாகலெட்சுமி அவர்களிடமும், 17.09.2026ம் தேதி 5 ரசீது புத்தகங்களை தற்போதைய A2 பிரிவு எழுத்தர் திரு.விஸ்வநாதன் அவர்களிடமும் வழங்கி, அவர்களிடமிருந்து கையொப்பம் பெற்றதாகவும் தெரிவித்தார். ஒவ்வொரு நாளும் மாலை 05.00 மணிக்குள் அன்றைய தினம் வசூல் செய்யப்பட்ட தொகையை வருவாய் உதவியாளர் திரு.மாரிமுத்து தன்னிடம் செலுத்த வேண்டும் என்றும், அதன்படி 01.09.2026ம் தேதி ரூ.2,180/-, 02.09.2026ம் தேதி ரூ.2,040/-, 03.09.2026ம் தேதி ரூ.2,280/-, 04.09.2026 முதல் 07.09.2026 வரையிலான வசூல் தொகையாக 07.09.2026ம் தேதி ரூ.9,320/-, 08.09.2026ம் தேதி ரூ.2,120/-, 09.09.2026ம் தேதி ரூ.2,200/-, 10.09.2026ம் தேதி ரூ.2,080/-, 11.09.2026ம் தேதி ரூ.2,040/-, 12.09.2026 முதல் 15.09.2026 வரையிலான வசூல் தொகையாக 15.09.2026ம் தேதி ரூ.8,480/-, 16.09.2026ம் தேதி ரூ.2,060/-, 17.09.2026ம் தேதி ரூ.2,040/-, 18.09.2026ம் தேதி ரூ.2,100/- மற்றும் 19.09.2026 முதல் 21.09.2026 வரையிலான வசூல் தொகையாக 21.09.2026ம் தேதி ரூ.6,240/- என மொத்தம் ரூ.45,180/- தொகையை வருவாய் உதவியாளர் திரு.மாரிமுத்து தன்னிடம் செலுத்தியதற்கு, தான் உரிய ரசீதுகளை வழங்கியதாக தெரிவித்தார். மேலும், பயன்படுத்தப்பட்ட ரசீது புத்தகங்களின் அடிக்கட்டைகளை வருவாய் உதவியாளர் A2 பிரிவு எழுத்தரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும், பின்னர் அவற்றை வருவாய் ஆய்வாளர் சரிபார்த்து, கையொப்பமிட்டு, குறிப்புரையுடன் தணிக்கைக்காக காசாளரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். அவரிடம் கேட்டுக்கொண்டதன்பேரில், 1) திரு.மாரிமுத்து வசூல் தொகையை செலுத்தியதற்கான 13 ரசீதுகள், 2) அசல் ரசீதுகள் பெறப்பட்டதற்கான டெலிவரி நோட் - 1 பக்கம் மற்றும் 3) இருசக்கர வாகன நிறுத்துமிட ரசீது புத்தகங்கள் வழங்கப்பட்டமைக்காக பராமரிக்கப்பட்ட பதிவேடு - பக்கம் 1 முதல் 92 வரை ஆகியவற்றை ஆஜர்படுத்தினார். மேற்படி ஆவணங்கள் தொடர் விசாரணைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டன. பின்னர், திரு.மாரிமுத்து மற்றும் திரு.ஆனந்தன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றப்பட்ட நான்கு இலக்க வரிசை எண் கொண்ட ரசீது புத்தகங்களின் அடிக்கட்டைகள் மற்றும் ரசீதுகள் மற்றும் ஆறு இலக்க வரிசை எண் கொண்ட ரசீது புத்தகங்களின் அடிக்கட்டைகள் மற்றும் ரசீதுகள் ஆகியவற்றை ஆய்வு செய்ததில், நான்கு இலக்க வரிசை எண் கொண்ட 19 ரசீது புத்தகங்களின் அடிக்கட்டைகள் மற்றும் ரசீதுகள் போலியானவை என உறுதி செய்யப்பட்டதாக தெரிவித்தார். இது தொடர்பாக அவரை விசாரித்து, அவரது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும், மேற்படி இரண்டு இருசக்கர வாகன நிறுத்துமிடங்களில் 22.09.2026ம் தேதி வாகனம் நிறுத்துபவர்களிடமிருந்து ஆறு இலக்க வரிசை எண் கொண்ட அசல் ரசீதுகள் மூலம் வசூலிக்கப்பட்ட ரூ.3,060/- தொகை கைப்பற்றப்படாமல், திரும்ப காசாளர் திரு.அந்தோணி ஜான் பீட்டர் அவர்களிடம்

ஒப்படைக்கப்பட்டு, உரிய அரசு கணக்கில் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து, நகராட்சி அலுவலகத்தில் பணியிலிருந்த A2 பிரிவு எழுத்தர் திருமதி.நாகலெட்சுமி அவர்களிடம் இருசக்கர வாகன நிறுத்துமிடத்தில் பணம் வசூல் செய்வது தொடர்பாக விசாரித்ததில், தான் கடந்த நான்கு மாதங்களாக மேற்படி இருக்கையில் பணிபுரிந்து வருவதாகவும், இராமநாதபுரம் நகராட்சி கூடுதல் பொறுப்பு ஆணையாளர் திரு.குமரன் அவர்கள் செயல்முறை ஆணை ந.க.எண்.934/2025/A2ன் அடிப்படையில், இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் இருசக்கர வாகன நிறுத்துமிடங்களில் துறை ரீதியாக வசூல் பணி மேற்கொள்ள திரு.ஆனந்தன், துப்புரவு மேற்பார்வையாளர் மற்றும் திரு.முருகேசன், துப்புரவு பணியாளர் ஆகியோரை காலை 06.00 மணி முதல் மாலை 06.00 மணி வரையும், அலுவலக உதவியாளர்களான திரு.பழனிமுருகன் மற்றும் திரு.சந்திரசேகரன் ஆகியோரை மாலை 06.00 மணி முதல் மறுநாள் காலை 06.00 மணி வரையும், வருவாய் உதவியாளர் திரு.மாரிமுத்துவை வசூல் செய்த நபர்களிடமிருந்து பணத்தைப் பெற்று நகராட்சி காசாளரிடம் ஒப்படைக்கவும், அதனை வருவாய் ஆய்வாளர் திரு.ரமேஷ்குமார் மேற்பார்வை செய்யவும் நியமித்து, கடந்த 31.08.2026ம் தேதி உத்தரவு பிறப்பித்ததாகவும் தெரிவித்தார். அதன்படி, TIRUNELVELI DISTRICT MULTI PURPOSE SERVICE INDUSTRIAL CO-OPERATIVE SOCIETY LTD என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ரசீது புத்தகங்களில், காசாளர் திரு.அந்தோணி ஜான் பீட்டர் அவர்களிடமிருந்து வருவாய் உதவியாளர் திரு.மாரிமுத்து கேட்டுக்கொண்டதன்பேரில், கடந்த 31.08.2026 முதல் 07.09.2026ம் தேதி வரை 20 ரசீது புத்தகங்களை A2 பிரிவு எழுத்தராகிய தான் பெற்றுக்கொண்டு, வருவாய் உதவியாளர் திரு.மாரிமுத்துவிடம் வழங்கியதாகவும், ரசீது புத்தகங்களை பெற்றுக்கொண்டபோது காசாளரால் பராமரிக்கப்பட்ட பதிவேட்டில் கையொப்பமிட்டு பெற்றுக்கொண்டதாகவும் தெரிவித்தார். மேலும், பயன்படுத்தப்பட்ட ரசீது புத்தகங்களின் அடிக்கட்டைகள் இதுவரை வருவாய் உதவியாளர் திரு.மாரிமுத்துவால் தன்னிடம் ஒப்படைக்கப்படவில்லை என்றும், அவை தணிக்கைக்காக வருவாய் உதவியாளரால் தன்னிடம் ஒப்படைக்கப்பட்டு, பின்னர் வருவாய் ஆய்வாளர் சரிபார்த்து, கையொப்பமிட்டு, குறிப்புரையுடன் காசாளரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். மேலும், வாகன வசூல் தொடர்பாக பராமரிக்கப்பட்டு வரும் கோப்புகளை ஆஜர்படுத்துமாறு கேட்டுக்கொண்டதன்பேரில், பக்கம் 1 முதல் 34 வரையிலான கோப்பை ஆஜர்படுத்தினார். மேற்படி கோப்பு தொடர் விசாரணைக்காகக் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக அவரை விசாரித்து, அவரது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேற்படி திடீர் சோதனை 22.09.2026ம் தேதி 15.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு, 23.09.2026ம் தேதி 13.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி சோதனையில் போலியான ரசீதுகள் மூலம் வாகனம் நிறுத்துபவர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்ட தொகை ரூ.12,750/-, போலியான ரசீதுகளின் அடிக்கட்டைகள் - 19, வாகனம் நிறுத்துபவர்களால் திரும்ப ஒப்படைக்கப்பட்ட வாகன ரசீதுகள் மொத்தம் - 2,045, ரப்பர் ஸ்டாம்ப், இங்க் பேட் மற்றும் சிவப்பு நிற ரெக்சின் கைப்பை ஆகியவை கைப்பற்றப்பட்டன. மேலும், சன் பிரிண்டர்ஸ் உரிமையாளர்

திரு.ஜோசப் ஜெயராஜன் அவர்கள் ஆஜர்படுத்திய 4,000 போலி ரசீதுகளில், 4 ரசீது புத்தகங்கள் பைண்டிங் செய்யப்பட்ட நிலையிலும், மீதமுள்ள 3,600 போலி ரசீதுகள் வரிசை எண் குறிப்பிடப்படாமல் பைண்டிங் செய்யப்படாத நிலையிலும் இருந்தன. அவற்றுடன், முகவை பிரிண்டர்ஸ் உரிமையாளர் திரு.செந்தில்குமார் அவர்கள் ஆஜர்படுத்திய கம்ப்யூட்டர் டிசைனிங் புரூப்பும் தொடர் விசாரணைக்காகக் கைப்பற்றப்பட்டது. எனவே, மேற்கண்ட திடீர் சோதனையின் அடிப்படையில், 1) திரு.ரமேஷ்குமார், வயது 36/2026, த/பெ.கருப்பையா, வருவாய் ஆய்வாளர், இராமநாதபுரம் நகராட்சி, 2).திரு.மாரிமுத்து, வயது 38/2026, த/பெ.காளிமுத்து, வருவாய் உதவியாளர், இராமநாதபுரம் நகராட்சி, 3) திரு.ரிஷிகேசவன், வயது 47/2026, த/பெ.கணேசன், வருவாய் உதவியாளர், இராமநாதபுரம் நகராட்சி, 4) திரு.ஜோசப் ஜெயராஜன், வயது 68/2026, த/பெ.மனுவேல்பிள்ளை, சன் பிரிண்டர்ஸ், இராமநாதபுரம் மற்றும் 5).திரு.ஆனந்தன், வயது 55/2026, த/பெ.சாத்தன், துப்புரவு மேற்பார்வையாளர், இராமநாதபுரம் நகராட்சி ஆகியோர் ஒருவருக்கொருவர் உடந்தையாக இருந்து, போலியான ரசீதுகளைத் தயாரித்து, அவற்றின் மூலம் வாகனம் நிறுத்துபவர்களிடமிருந்து பணம் வசூல் செய்து, முறைகேடான செயல்களில் ஈடுபட்டுள்ளது தெரிய வருகிறது. எனவே, மேற்கண்ட நபர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதற்காக, மேற்படி திடீர் இணை சோதனையின்போது கைப்பற்றப்பட்ட போலியான ரசீதுகள் மூலம் வாகனம் நிறுத்துபவர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்ட ரூ.12,750/- பணம், பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள், திடீர் சோதனை தொடர்பான எனது அறிக்கை மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை உரிய நடவடிக்கைக்காக தங்களிடம் ஒப்படைக்கிறேன். (ஒப்பம்) திருமதி.சு.மீனலோசனி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், இராமநாதபுரம், சிவகங்கை (ம) விருதுநகர் மாவட்டம். 23.09.2026. இன்று 23.09.2026ம் தேதி 16.00 மணிக்கு மேற்படி புகாரை பெற்று உயர் அதிகாரிகளின் வாய்மொழி ஒப்புதலின்பேரில் மேற்படி எதிரிகள் மீது 16.50 மணிக்கு இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண்.13/2026 u/s 13(1)(a) r/w 13(2) and Section 12 of the Prevention of Corruption Act, 1988 (as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018) and Sections 316(5), 336(3), 340(2) and 61(2) of the Bharatiya Nyaya Sanhita, 2023 ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் சோதனையின் போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கையின் அசல், எதிரிகளின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம் இராமநாதபுரம் மாவட்டம் அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

23/09/26.

DEPUTY SUPDT. OF POLICE
VIGILANCE AND ANTI-CORRUPTION
RAMANATHAPURAM